**செய்தி வெளியீடு எண்: 563** **நாள்: 23.08.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(23.8.2018)** தலைமைச் செயலகத்தில், ‘‘பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு’’ உருவாக்கிட மாநில அளவில் பிரச்சாரத்தினை துவக்கி வைக்கும் விதமாக, அதற்கான இலச்சினையை அறிமுகம் செய்து, www.plasticpollutionfreetn.org என்ற வலைதளத்தையும், Plastic Pollution Free Tamil Nadu என்ற கைப்பேசி செயலியையும் (App) துவக்கி வைத்து, பிளாஸ்டிக் பயன்பாடுகளை தவிர்ப்பது மற்றும் பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்களை மறுசுழற்சி செய்வது குறித்த குறும்படங்களை வெளியிட்டார்கள். மேலும், பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாட்டை உருவாக்கிட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் விளம்பரத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள திரைப்பட நடிகர் திரு.விவேக் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், “பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஆய்வு செய்யும் வல்லுநர் குழு” என்ற சிறப்புக் குழுவினை அமைத்தார்கள். அந்த வல்லுநர் குழுவின் ஆலோசனையின்படியும், உங்கள் அனைவரின் ஒத்துழைப்போடும், பங்களிப்போடும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்படுத்த இருக்கும் இத்திட்டத்தின் மூலம், “பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாட்டை” நம் எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம் என்றும், பொது மக்களும், வியாபாரிகளும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக, துணிப் பைகள், காகித உறைகள் போன்ற பொருட்களைப் பயன்படுத்த பழகிக் கொள்ள ஏதுவாக, பிளாஸ்டிக் பொருட்களுக்கான தடைகளை உடனடியாக அமல்படுத்தாமல், **2019**, ஜனவரி மாதம் **1–**ஆம் தேதி முதல் அமல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது என்றும், உலக சுற்றுச்சூழல் தினமான **5.6.2018** அன்று சட்டப்பேரவை விதி எண் **110–**ன் கீழ், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் **1986–**ன் கீழ், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தயாரித்தல், விற்பனை செய்தல், சேமித்து வைத்தல்

மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றை கண்காணிக்கும் வகையிலும், இது தொடர்பாக அரசுத் துறைகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்கும், தமிழ்நாட்டை சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் மதுரை என ஆறு மண்டலங்களாக பிரித்து, மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மண்டல ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டும், பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்று பொருட்களை பயன்படுத்துவது குறித்த பயிலரங்குகள் அனைத்து மண்டலங்களிலும் நடத்துவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசு **54** லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது.

‘‘பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு’’ உருவாக்கும் வகையில், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட, மாநில அளவில் பிரச்சாரத்தினை துவக்கி வைக்கும் விதமாக, ‘‘பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு’’ இலச்சினையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அறிமுகம் செய்து வைத்தார்கள்.

மேலும், பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்திட Plastic Pollution Free Tamil Nadu (www.plasticpollutionfreetn.org) என்ற வலைதளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இவ்வலைதளத்தில், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தவிர்ப்பதற்கான அவசியத்தையும், எவ்வாறு எல்லாம் தவிர்க்கலாம் என்பது குறித்தும், பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்ப்பது, குறைப்பது, மறுசுழற்சி செய்வது குறித்து அரசு துறைகள் மூலம் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள், பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு திட்டத்தை செயல்படுத்தும் அரசு அலுவலர்களின் விவரங்கள் போன்றவை இடம் பெற்றுள்ளன. மேலும், Plastic Pollution Free Tamil Nadu என்ற கைப்பேசி செயலியையும் (App) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்து வைத்தார்கள்.

பிளாஸ்டிக் பயன்பாடுகளை தவிர்ப்பது மற்றும் மறுசுழற்சி செய்வது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்திடும் வகையில் தயாரிக்கப்பட்ட குறும்படங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வெளியிட்டார்கள்.

திரைப்பட பிரபலங்கள் மூலமாக மக்களிடையே பிளாஸ்டிக் பொருட்களினால் ஏற்படும் தீமைகள் குறித்தும், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடுகளை தவிர்ப்பது குறித்தும், பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக துணிப் பைகள், சணல் பைகள், காகித பைகள் போன்றவற்றை உபயோகிப்பது குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசின் சார்பில் ''பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு'' விளம்பரத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள திரைப்பட நடிகர் திரு.விவேக் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அறிமுகம் செய்து வைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆகியோருக்கு காகித கோப்புறைகளும், விளம்பரத் தூதுவர் திரு.விவேக் அவர்களுக்கு துணிப் பை மற்றும் சணல் பைகளையும் வழங்கி ''பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு'' பிரச்சாரத்தை துவக்கி வைத்தார்கள்.

இதன் தொடாச்சியாக, மாவட்ட அளவில் ''பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு'' பிரச்சாரத்தை 25.8.2018 அன்று சம்பந்தப்பட்ட மாவட்ட அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் துவக்கி வைப்பார்கள்.

மேலும், பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பாக்குமட்டையில் தட்டு, கோப்பை போன்ற பொருட்களை தயாரிக்கும் தொழில் முனைவோர்களுக்கு தொழில் வணிகத் துறை மூலமாக மானியத்துடன் கூடிய கடனுதவிக்கான 21 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலைகளை 5 தொழில் முனைவோர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

''பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு'' உருவாக்கிட மாநில அளவில் பிரச்சாரத்தினை இன்று துவக்கி வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பேசியதாவது:

இந்த நிகழ்ச்சிக்கு வருகை புரிந்திருக்கின்ற, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், தலைமைச் செயலாளர் மற்றும் துறையினுடைய செயலாளர் அவர்களுக்கும், சிறப்புத் தூதராக வருகை புரிந்துள்ள நடிகர்

திரு.விவேக் அவர்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அரசு உயர் அதிகாரிகளுக்கும், ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே, ஒரு முறை பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்ய வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் பொதுமக்களிடமிருந்து வந்த காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை பலமுறை பரிசீலித்து, நடவடிக்கை எடுத்து, ஜனவரி, 2019 முதல், ஒரு முறை பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்ய வேண்டுமென்று அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாம் உள்ளாகின்றோம். தூய்மையான தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால், ஒரு முறை பயன்படுத்திய பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும், அதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பை நல்க வேண்டும். தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக மாற்றுப் பொருட்களை பொதுமக்கள் பயன்படுத்துவதன் மூலம் சுகாதாரமான வாழ்க்கையை நாம் அடைய முடியும். பிளாஸ்டிக் பொருட்களினால், பொதுமக்களுக்கு பல்வேறு இன்னல்களும், சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுகின்ற காரணத்தினாலே இதை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இதற்கு வியாபார மக்களும், பொதுமக்களும் முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

பிளாஸ்டிக்கை முழுமையாக தடை செய்வதற்கு விளம்பரத் தூதுவராக திரைப்பட நடிகர் மரியாதைக்குரிய விவேக் அவர்களும், அவரோடு இணைந்து பணியாற்றுவதற்காக நடிகர்கள் திரு.சூர்யா, திரு.கார்த்திக், நடிகை திருமதி.ஜோதிகா அவர்களும் அரசின் சார்பாக விளம்பரத் தூதுவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மரியாதைக்குரிய நடிகர் திரு.விவேக் அவர்கள் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்றார், மற்ற மூன்று நடிகர்களான திரு.சூர்யா, திரு.கார்த்திக், திருமதி.ஜோதிகா ஆகியோருக்கு திரைப்படப் படப்பிடிப்பு இருக்கின்ற காரணத்தினால் இன்றையதினம் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இயலவில்லை.

எதிர்காலத்தில் தமிழகத்தை, பிளாஸ்டிக் இல்லாத தமிழகமாக உருவாக்குவதற்கு அம்மாவினுயை அரசு எடுத்த நடவடிக்கைக்கு வியாபார மக்களும், பொதுமக்களும் முழு

ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, என்னிடம் வரும் அரசு கோப்புகளிலுள்ள மேலுறைகள்கூட இனிமேல், காகிதத்தினாலான Folder–களையே பயன்படுத்த வேண்டுமென்பதற்காகவும், மேலும், அனைத்து அமைச்சர்களுக்கும் இன்று முதல் அதைப் பயன்படுத்துவதற்கு, அரசின் சார்பாக இன்றே வழங்க இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர் செயலர் திரு.டி. சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**